# நாவற்குழியில் ராணுவ ரோந்து; துப்பாக்கி சூடு குண்டு வெடிப்பு; பதற்றநிலை; இளைஞர்கள் கைது

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 6-12-86 வெள்ளி (கார்த்திகை 21 ரபியு அவ் 23) முழக்கம் 301

நாவற்குழி முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்றுக்காலை முதல் இடம்பெற்ற குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது. இம் முகாமிலுள்ள படையினர் கால் நடையாக ரோந்து சென்று வாகனங்களைச் சோதனையிடுதல் போன்றவற்றில் ஈடுபட்டதாலேயே இச் சம்பவங்கள் இடம்பெற்றது. நண்பகலளவில் முகாமிலிருந்து சுமார் இருநூறு யார் தொலைவிலுள்ள உணவுத் திணைக்களத்தின் விநியோகக் களஞ்சியத்திற்கு அண்மையில் படையினர் சென்றபோது அவர்களை நோக்கி கைக்குண்டுகள் வீசப்பட்டன. இதனைத் தொடர்ந்து படையினர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகவும், உணவுக் களஞ்சியத்தின் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. களஞ்சியத்தின் உள்ளே இருந்த ஊழியர்களும் மற்றவர்களும் பின்பக்கத்தால் பாய்ந்து ஓடிவிட்டார்கள். இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் நின்ற சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

★ பாரத வெளியுறவு அமைச்சர் பஹத் நேற்று அறிவிப்பு

# இலங்கையில் அபாயகர நிலை; தமிழரே அதிகளவில் கொலை!

## யுத்தநிறுத்தம்சரியாகஅமுலில்லை;படைகள் கட்டுப்பாடில்லை; கொந்தளிப்பு ஏற்படலாம்

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம் மிக அபாயகரமான ஓர் கட்டத்தை இப்போது எய்தியுள்ளது. பெரும் கொந்தளிப்பு எவ்வேளையிலும் ஏற்படலாம். ஏற்கனவே பெருந்தொகையான தமிழர்களே கொலைசெய்யப்பட்டுள்ளனர். யுத்தநிறுத்த மீறல்களைத் தடுப்பதற்கு பாரதம் தன்னாலான முழுமுயற்சிகளையும் எடுத்து வருவதாக பாரத வெளியுறவு அமைச்சர் திரு.பி ஆர். பஹத் நேற்று ராஜ்ய சபையில் அறிவித்தார்.

சபை உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்கு எழுத்து மூலம் பதிலளித்த அமைச்சர், ஆயுதப்படைகளைக் கட்டுப்படுத்தி வைத்திருக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் பாரதம் ஏற்கனவே பலதடவை தெரிவித்துவிட்டது எனவும் குறிப்பிட்டார்.

"யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணியை மேலும் பயனுள்ளதாக்க முயற்சிக்கின்ற நேரம் இதனை மீறுதலாலேயே இரு பகுதியினரும் வன்செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர் எனவும் தெரிவித்த அமைச்சர் பஹத், பெரும்பான்மையாக தமிழ் மக்களே கொல்லப்பட்டுள்ளனரென்றும், சில சிங்களக்

...6 ம் பக்கம் பார்க்க

பாரதப் பிரதிநிதி ராமகிருஷ்ணன் எம். பி.

## ஈழத்தமிழ் அகதிகளின் நிலை; மனித உரிமை ஐ. நா. குழுமுன்னல் புகார்

(நியூயோர்க்)

இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு அடக்கு முறை காரணமாகத் தமிழ் நாட்டிற்குத் தப்பியோடி வரும் தமிழ் அகதிகள் நிலையினை பாரதம் ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளது.

தமிழ் நாட்டில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் அகதிகளுக்குப் புகலிடம் அளித்திருப்பதால் பாரதம் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பற்றி ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மனித உரிமைக் கமிட்டியிடம்

– 6ம் பக்கம் பார்க்க

## பளையில் கைதானவர்களில் 39 பேர் விடுதலையாகினர்

(கொடிகாமம்)

கடந்த செவ்வாய்க்கிழமை பளையில் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது பளை பஸ் நிலைய சுற்றுடலில் கைது செய்யப்பட்ட 49 பேரில் 39 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பத்துப் பேர் தொடர்ந்தும் காவலில் வைக்கப் பட்டுள்ள

... 6 ம் பக்கம் பார்க்க

## நவசமசமாஜ செயலாளர் கைது; 11வரை ரிமான்டில்!

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை நேற்றுக்காலை கொழும்பில் விநியோகித்ததாகக் கூறப்படும் நவசமசமாஜக் கட்சிச் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

வாசுதேவ நாணயக்காரவை தலைவராகக் கொண்ட இக்

...6 ம் பக்கம் பார்க்க

## இளைஞர் மர்ம மரணம்

(முல்லைத்தீவு)

முள்ளியவளை எனும் இடத்தைச் சேர்ந்த இளைஞரான த. எழில்மாறன் (வயது 16)

...6 ம் பக்கம் பார்க்க

## வவுனியாசுற்றிவளைக்கப்பட்டுதிடீர்சோதனை இளைஞர்ஒருவர் மட்டும்கைது

(வவுனியா)

வவுனியா கூட்டுமுகாமைச் சேர்ந்த ஆயுதப்படையினர் தமக்குக் கிடைத்தரகஸிய தகவலொன்றைத் தொடர்ந்து இங்குள்ள குறிப்பிட்ட சில பகுதிகளைச் சுற்றி வளைத்துச் சோதனையிட்டனர்.

நீலாட்சிக்குளம், குஞ்சிக்குளம் ஆகிய பகுதிகளே கடுமையான சோதனைக் குட்படுத்தப்பட்டன.

பல தீவிரவாதிகள் முகாம்கள் முற்றுகையிடப்பட்டதாகவும், பெரும் தொகையான குண்டுகள், ஆயுதங்கள், வெடி மருந்துகளை படையினர் கைப்பற்றியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் முகாம்களில் எவரும் கைதானதாகத் தெரிய

...6 ம் பக்கம் பார்க்க

## அமிர் லண்டன் சென்றார் சிவா சென்னை திரும்பினர்

(புதுடில்லி)

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் லண்டன் பயணமாகியுள்ளார்.

புதுடில்லியில் பாரத வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரியுடன் கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகள் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் புதன்கிழமை அங்கிருந்து லண்டன் சென்றார்.

சில முக்கிய சந்திப்புகளை இவர் அங்கு மேற்கொள்ளலாமெனத் தெரிகின்றது.

திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், இரா. சம்பந்தன் ஆகியோர் நேற்றுச் சென்னை திரும்பினர்.

## இரு தமிழ் சுங்க அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கம்!

கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற பத்து லட்சம் அமெரிக்க டாலர் கடத்தல் குற்றச்சாட்டில் அகப்பட்ட இரண்டு தமிழ் சுங்க அதிகாரிகளும் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பிரதி சுங்க அதிகாரி திரு. செல்வரத்தினம், உதவிச் சுங்க அதிகாரி திரு. தெய்வேந்திரம் ஆகிய இருவரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளாகும்.

கடத்தலில் பிடிபட்ட ஐந்து வெளிநாட்டவருக்கும் ஏழாயிரம் அமெரிக்க டாலர் அபராதம் விதிக்கப்பட்டது.

## ரயில் பயணம் செய்வதானல் இவைகளை அறிவது நல்லது

காங்கேசன்துறை-கொழும்பு புகையிரதப் பயணிகளின் நலன் கருதி யாழ். புகையிரத நிலைய பிரதம அதிபர் திரு.வி. எஸ். ராஜா, பின்வரும்விபரங்களைப்பொது மக்களின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

(1) காங்கேசன் துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய புகையிரத நிலையங்களில் பணத்திற்குப் பிரயாணச் சீட்டுக்கள் வழங்கப்படமாட்டாது. பிரயாண ஆணைப்பத்திரத்திற்கு (வாரண்ட்) இப்புகையிரத நிலையங்களில் பிரயாணச்சீட்டுபெற்றுக் கொள்ளலாம்.

(2) யாழ்ப்பாணம் தவிர்ந்த மேற் குறிப்பிட்ட புகையிரத

...6 ம் பக்கம் பார்க்க

## மன்னர், மட்டுநகர் டிக்கற் விற்பனை காசுக்கட்டளைக்கு

மன்னார் ரயிலில் இடம்பெற்ற கொள்ளையைத் தொ

- 6ம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை ஈழமுரசு

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை 1986ம் ஆண்டுக்கு
## வழங்குநர்களைப் பதிவு செய்தல்

1986ம் ஆண்டுக்கு (அ) இருப்பிலிருந்தும் (ஆ) இறக்குமதி செய்தும் பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்குத் தாமாகவே பதிவு செய்ய விரும்பும் இலங்கையிலுள்ள வியாபார நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள் முகவர்கள், தனி ஆட்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(2) விண்ணப்பங்கள் ''1986ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்,'' எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு 1986-12-20 தேதியில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் இணைப்படியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) குறிக்கப்பட்ட ஒவ்வொரு பொருட்கள் சேவைகளின் இனம் தொடர்பாக வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இப்பல்கலைக்கழகத்துடன் 1985ஆம் ஆண்டுக்காகப் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் 1986ஆம் ஆண்டுக்கும் புதிய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும் மீளளிக்கப்படாத பதிவு செய்தற் கட்டணத்திற்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு எழுதப்பெற்ற 25 ரூபா பெறுமதியான காசோலை/காசுக்கட்டளை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

(5) வழங்குநர்களைத் தெரிவு செய்யும் உரிமையைப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளதுடன் அதனது தீர்மானம் இறுதியானதாகும் கூறுவிலைகளைக் குறித்ததன் பின்னர் வழங்கல் செய்யத்தவறும் அல்லது கட்டளையிட்டதன் பின்னர் அவற்றை உரியகாலத்தில் ஒப்படைக்கத் தவறும் அல்லது மாதிரிகள் விபரக்கூற்றுக்கள் ஆகியவற்றுக்கு இசைவற்ற வழங்கல்களைச் செய்யும் வழங்குநர்கள் அறிவித்தலின்றி வழங்குநர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவர்.

(6) பின்வரும் தகவல் உட்பட எல்லா விபரங்களையும் விண்ணப்பம் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) பொருட்கள் சேவைகளின் வழங்கல்கள் (பொருட்கள், இறக்குமதி/இருப்பிலிருந்து வழங்குதல்)

(ஆ) தனிப்பட்ட/வியாபார நிறுவனத்தின் பெயரும் முகவரியும்

(இ) தொலைபேசி இலக்கம் - தந்தி முகவரி

(ஈ) வியாபார நிறுவனத்தின் இயல்பு (தனி உரிமையாளர், பங்குடைமை, பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஆகியவற்றில் எது எனக் குறிப்பிடவும்)

(உ) பதிவு இலக்கம் (வியாபாரப் பெயர்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பின்)

(ஊ) வங்கியாளர்கள் பெயர்கள்

(எ) விசாரிக்கக்கூடிய வழிகள் (ஏதாவது இருப்பின்)

(ஏ) கிடைக்கத்தக்க கடன் வசதிகள். எல்லா உரிய விபரங்களை அளிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

### பொருட்கள் வழங்கல்

1) எழுது கருவிகள்
2) அலுவலக உபகரணம்
3) அச்சிடல்
4) பாடக்குறிப்புக்களை இரட்டித்தல்
5) எல்லா வகையான அச்சடித்தலுக்குமான கடதாசிகளும் ஏனைய பொருட்களும்
6) அச்சுப்பாளம், இறப்பர் பொறிகள், பித்களை அடையாளங்கள் முதலியன
7) அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கூட்டல் இயந்திரங்கள், கணிப்பு மானிகள், இரட்டித்தல் இயந்திரங்கள்)
8) நூல்களும் பருவ இதழ்களும்
9) தளபாடம்
10) மரம்
11) கட்டடப் பொருட்கள்
12) கடின உலோகப் பொருட்கள்
13) குழாய்களும் வடிகால் உபகரணங்களும்
14) துப்புரவேற்பாட்டுப் பொருட்கள்
15) மின்சார உபகரணங்களும் உதிரிப்பாகங்களும்
16) இலத்திரன் இணையுறுப்புகள்
17) இயந்திர சாதனங்கள், உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்
18) எல்லா வகையான வாகனங்களுக்குமுரிய உதிரிப்பாகங்கள்
19) ரயர்கள், ரியூப்கள், பற்றறிகள்
20) ஆய்வு கூட உபகரணங்களும் இரசாயனப் பொருட்களும்
21) விளையாட்டு, நலப் பொருட்கள்
22) சீருடைகள் சப்பாத்துக்கள் மழை அங்கிகள், பசைதடவி விறைப்பாக்கி, நெடுஞ் சப்பாத்துகள், குடைகள், தோற் பொருட்கள் ஆகிய சீருடைக்கான பொருட்கள்
23) மட்பாண்டப் பொருட்களும் கண்ணாடிப் பொருட்களும்
24) கலயச்சாளர்களுக்குத் தேவையான உபகரணங்களும் ஏனையபொருட்களும்
25) நிழற்படக்கருவிச் செய்முறைக்கான இருட்டறை உபகரணங்களும் இரசாயனப் பொருட்களும்.
26) நிழற்படம் உருவாக்குவதற்குத் தேவையான உதிரிப்பாகங்கள்
27) புத்தகங்கட்கு புத்தகம் கட்டுவதற்கான உபகரணங்கள்
28) தோட்டச் செய்கைக்கான உரங்கள், இரசாயனப் பொருட்கள், உபகரணங்கள்

### சேவைகள்

29) அலுவலக உபகரணங்களைப் பழுதுபார்த்தல்
30) சிவில் பொறியியல் பழுதுபார்த்தல், நிர்மாணித்தல் உட்பட கட்டட வேலைகள், வீதியமைத்தல் ஆகியன
31) எல்லாவகையான வாகனங்களும் பழுதுபார்த்தல்
32) போக்குவரத்துச் சேவைகள்
33) வடிகால், நீர்க்குழாய்அமைப்புக்களை பழுது பார்த்தலும் காப்புக்காவல் செய்தலும்
34) புத்தகங்களையும் பருவ இதழ்களையும் கட்டுதல்
35) கதிரை பின்னுதல் உட்பட தளபாடங்களைப் பழுதுபார்த்தல்
36) ஆய்வு கூடங்களில் பயன்படுத்துவதற்கான தாவரங்கள் பொருட்கள், மனித உடல்கள் மிருகங்கள் ஆகியனவற்றை வழங்கல்
37) இறக்குமதி செய்யப்படும் பொருட்களை அகற்றுதல்
38) எல்லாவகையான குளிர்சாதனப்பெட்டிகளையும், குளிரூட்டி இயந்திரங்களையும் இணைத்தலும் பழுதுபார்த்தலும்.

பதிவாளர்:
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பிறந்தநாள் வாழ்த்து

✱ மல்லாகம் ரவீந்திரன் தயாநிதி தம்பதியின் மகள் சுஜீதா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ திருநெல்வேலி வடக்கு அருளானந்தன் நிர்மலாதேவி தம்பதியின் மகன் பிரசாந்தன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ செட்டித்தெரு சிற்சபேசன் சுபாஜினி தம்பதியின் மகள் ஆரணி இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ முள்ளியவளை விநாயகர்வீதி பூபாலசிங்கம் இராசமணி தம்தியின் மகன் மகேஸ் இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதி சண்முகநாதன் சுலோஜனு தம்பதியின் இரட்டையர் விஜிதா விஜிதன் இருவரும் இனறு தமது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்கள்.

✱ உயரப்புலம் பிரான்சிஸ் பிரபா தம்பதியின் மகன் றெஜேஜன் இன்று தனது நான்காவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

## உதவி வழங்க வேண்டுகோள்

பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வுச் சபை, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரின் கண்காணிப்பின் கீழும் பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் அனுசரணையுடனும் இயங்கி வருகின்றது. இங்குள்ள அகதிகளுக்கு நிதி உதவி பொருளுதவி வழங்க விரும்புவோர் ந. சிவசுப்பிரமணியத்துடன் செயலாளர், அகதிகள் புனர்வாழ்வுச் சபை தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## வரி விளம்பரம்

### தேவை

தினசரி காலை, மாலை பூசைகளும், விசேஷ தினங்களில் விசேஷ பூசைகள் முதலியன நடைபெறும் ஆலயத்திற்கு பூசகர் தேவை. தயவு செய்து விபரங்களுடன், எதிர்பார்க்கும் மாதப்படியுடன் (Allowance) 20-12-85க்கு முன்பாக கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். செயலாளர்: ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம், கொக்குவில்.

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. அனித்தா, வை. எம். சி. ஏ. கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

### பிள்ளையார் கதை

பிள்ளையார் கதை விரதத்தை முன்னிட்டு அழகிய விநாயகர் ஸ்ரிக்கர் ஒன்றை 20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம.

மில்க்வைற் நீலசோப் புதிய விலை ரூ. 2/- மட்டுமே.

–மில்க்வைற், யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது

எனது தேசிய அடையாள அட்டை இல. 562331409 X இலங்கை சீமெந்து கூட்டுத்தாபன அடையாள அட்டை லங்கா சீமெந்து நிறுவன அடையாள அட்டை கொண்ட சிவப்புநிற மணிபேஸ் 28 11-85ல் கட்டுவன் சந்திக்கும் புன்னாலைக்கட்டுவன் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. இவற்றை கண்டெடுத்தவர்கள் எனது தற்போதைய அவலநிலையை மனதில் கொண்டு கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். சன்மானம் கொடுக்கப்படும். கே. எஸ். குணசிங்கம், விநியோகப் பகுதி, லங்கா சீமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை.

### தவறிவிட்டது

கந்தையா தயாபரன் என்பவருடைய அடையாள அட்டையும் ரூபா 130/-ம் கல்வியங்காட்டு ரேட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் அளிக்கப்படும்.


## SPOKEN ENGLISH

English is caught rather than taught and best way of learning English is to speak it·

மூன்றே மாதங்களில் ஆங்கிலத்தைச் சரளமாகப் பேசக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு அரிய தொரு சந்தர்ப்பம்

Commencement : 16-12-85 காலை 9 மணி

Fees : Rs. 100/- (முழுப்பயிற்சிக்கும்)

ஆசிரியர்: பிரபல ஆங்கில விரிவுரையாளர்
கந்தையா நவரேந்திரன்

**CANTABIA INSTITUTE**
21, MAIN STREET, JAFFNA.
Phone: 24201

காவலூர் உதவி அரசு அதிபர் உரை

# கிராமங்களின் எழுச்சியே நாட்டின் வளர்ச்சியாகும்

(காரைநகர்)

"நாட்டின் வளர்ச்சி கிராமங்களின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கிராமிய வளர்ச்சியில் அக்கறை கொண்டு நாட்டின் முதுகெலும்பு போன்று செயற்படுதல் வேண்டும்."

இவ்வாறு காரைநகர் கிழக்கு மொந்திபுலம் இடைப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடத் திறப்பு விழாவிலும், வருடாந்தப் பொதுக் கூட்டத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

திரு. க. கனகசபை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் செல்வி சாந்தி சுப்பிரமணியம் தொடர்ந்து உரையாற்றுகையில், "கிராமப்புறச் சூழலுக்கு ஏற்ற வகையில் உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி அழகாக இக்கட்டடத்தை அமைத்துள்ளார்கள். இவர்களைப் பின்பற்றி ஏனைய கிராம அபிவிருத்திச் சங்கங்களும் அரசாங்க உதவியை எதிர்பார்க்காது தாமே தமது கட்டடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்வர வேண்டும். பொது மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து அச்சங்கங்களினூடாகத் தமது தேவைகளைக் குறிப்பிட்டால் விரைவில் பயன் கிடைத்துவிடும்" என்றார்.

காரைநகர் கிழக்கு விசேட சேவை அலுவலகர் திரு. எஸ். கே. சிவலிங்கம், கிராமசேவை அலுவலகர் திரு. கே. தில்லைநாதன், திரு. சோ. விக்கினேஸ்வரன், செல்வி. க. இராசலட்சுமி ஆகியோர் உரையாற்றினர். செயலாளர் திரு. ந. கணேசமூர்த்தி நன்றி தெரிவித்தார்.

# சோதிடக் கலைப் பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடு

(சாவகச்சேரி)

இலங்கை சோதிட ஆய்வு மன்றம் மக்களுக்கு சோதிடக் கலையைப் பயிற்றுமுகமாக சோதிடக் கலைப் பயிற்சி நெறி வகுப்புக்களை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

வானியல், புவியியல் சோதிடக் கணிப்பு, பலன் அறிமுறை ஆகிய பயிற்சிகளையே இம்மன்றம் அளிக்கவுள்ளது. ஆக மொத்தம் 18 மாதப் பயிற்சிகளே தரப்படவுள்ளன. இப்பயிற்சிகளில் சித்தி பெற்றவர்களுக்கு "சோதிடக் கலைமணி" என்ற சான்றிதழும் வழங்கப்படும் எனத் தெரியவருகிறது.

1986ல் ஆரம்பிக்கப்படவுள்ள இச் சோதிடக் கலைப் பயிற்சி நெறி வகுப்புகள் மாவிட்டபுரம் முருகன் ஆலய சௌஜன்னிய மண்டபம் நல்லை ஆதீனம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

# 'வருங்கால சமுதாயத்தைச் சிருஷ்டிக்கும் பாரியபணி ஆசிரியர்களைச் சார்ந்தது'

## இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம கல்வி அதிகாரி

(புலோலி)

"பெற்றோர்களின் ஒத்துழைப்பும், ஆசிரியர்களின் சேவை மனப்பான்மையுமே மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும், பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கின்றன. இதனைக் கருத்திற் கொண்டு பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒருங்கிணைந்து செயற்பட்டு மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும், பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் வழிவகுக்க வேண்டும்."

இவ்வாறு மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழாவிலும், வருடாந்த பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பிரதம கல்வியதிகாரி திரு. வெ. சபாநாயகம் குறிப்பிட்டார்.

வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு வித்தியாலய அதிபர். திரு. என். சிவபாதசுந்தரம் தலைமை தாங்கினார்.

பிரதம கல்வியதிகாரி திரு. சபாநாயகம் மேலும் பேசுகையில், "மாணவர்கள் கல்வியில் மாத்திரமின்றி, விளையாட்டுத் துறைகளிலும் முன்னணியில் திகழவேண்டும் அப்போது தான் வாழ்க்கையில் வெற்றி பெற்று மகிழ்ச்சியுடன் வாழ முடியும். இதனடிப்படையிலேயே விளையாட்டுத்துறை அபிவிருத்திக்குப் பல்வேறு வகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

மாணவர்களுக்குக் கல்வி போதிக்கப்பட்டால் மட்டும் போதாது. அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாகத் திகழ்வதற்கு ஒழுங்கு, கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை போன்ற பண்புகளும் அவர்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும் இதற்கு விளையாட்டுத்துறை சிறந்த சாதனமாக விளங்குகின்றது" என்றார்.

வித்தியாலய அதிபர். திரு. என் சிவபாதசுந்தரம் தலைமை உரையில், 'ஆசிரியப்பணி சமுதாயத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும். எதிர்காலச் சமுதாயத்தைச் சிருஷ்டிக்கும் பாரியபணி ஆசிரியர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. எனவே ஆசிரியர்கள் சேவை மனப்பான்மையுடன் கடமையை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.

இன்று மாணவர்கள் பாடசாலைகளில் கற்கும் நாட்கள் குறைவாக இருக்கின்றன. எனவே ஆசிரியர்கள் ஓய்வு நாட்களிலும் மாணவர்களுக்கு சேவை மனப்பான்மையுடன் கல்வியைப் போதிக்க வேண்டியுள்ளது. மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் பாடசாலைகளின் அபிவிருத்திக்கும் பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும்' என்றார்.

விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்குக்கான பரிசில்களையும் படிப்பிற்கான வருடாந்த பரிசில்களையும் விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதம கல்வியதிகாரி திரு. சபாநாயகத்தின் பாரியார். திருமதி. புஷ்பவதி சபாநாயகம் வழங்கினார். ஆசிரியர் திரு. எஸ். சதிர்காமத்தம்பி நன்றியுரை நிகழ்த்தினார்.

கதிரவேற்பிள்ளை இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. 12 வயதுப் பிரிவில் அதிவிசேட வீரனாக செல்வன். தி. சிவகுமாரும் 11 வயதுப் பிரிவில் அதிவிசேட வீராங்கனையாக செல்வி. வை. ஜெயமணியும் தெரிவாகினர்.

சமாதானசபை- வைபவத்தில் பேச்சு

# யதார்த்த பூர்வ தீர்வு காண சமாதான சபை பயன்படும்

(சங்கானை)

"சமாதான சபைகள் மூலம் மக்கள் பிரச்சினைகளை இலகுவாக தீர்த்துக் கொள்ளப் பழக வேண்டும். மேலும் பல பிரச்சினைகளைத் தேவையற்ற பணச் செலவுடன் கூடிய காலம் தாமதமான தீர்ப்புகளை எதிர்பார்த்து இருப்பதுடன் இடையில் மேலும் குற்றச் செயல்களை வளர்க்காது சமாதான சபையினரின் ஆலோசனைகளை அனுசரித்து நடக்க வேண்டும். சந்தேகங்கள் என்ற போர்வையில் பல குடும்ப தகராறுகள் ஏற்படும் வேளைகளில் நல்ல உதாரணங்களுடன் கூடிய கருத்துக்களை எடுத்துக் கூறி சமாதான சபையினர் நடவடிக்கைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும்."

இவ்வாறு வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்ற வட்டுக்கோட்டை-மேற்கு சமாதான சபை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வலிகாமம் மேற்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

வட்டு - மேற்குபிரிவு கிராம சேவை அலுவலர் திரு. க. சிறீகரன் சமாதான சபையின் சட்ட பிரமாணங்கள், வரையறைகள், நோக்கங்கள் பற்றிய விபரங்களை கூறி தொடர்ந்து உரையாற்றுகையில், "சமாதான சபையினர் ஊழல்கள் அற்ற முறையில் பிரச்சினைகளை அணுகி, ஆராய்ந்து, தீர்க்கமான, யதார்த்த பூர்வமான முடிபுகளை எடுத்து சமுதாயத்துக்கு முன்மாதிரியாக செயல்படவேண்டும் என்றும் மேலும் சபையினர் சமுதாய விரோத செயல்களான சர்வாதிகாரப் போக்கு, மதுப்பழக்கம், ஒரு பக்க சார்பானவார்த்தைப்பிரயோகங்கள் அனைத்தையும் நடைமுறையில் கைக்கொள்ளக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

கூடுதலான பொதுமக்கள் கலந்து கொண்ட மேற்படி கூட்டத்தில் பொதுமக்கள் வட்டார ரீதியான கருத்துக்களை கூறியதும் சமாதான சபைத் தெரிவை நிர்வாக உத்தியோகத்தர் திரு. இ. பாலசிங்கம், சக கிராம சேவை அலுவலர் திரு. கமலநாதன், பயிர்ச் செய்கை அலுவலர் திரு. ஜீ. சிதம்பரநாதன் நடைமுறைப் படுத்தினர்.

தலைவராக சட்டத்தரணி திரு. து பாக்கியநாதன், கௌரவ செயலாளராக திரு. சி. இராமச்சந்திரா, பொருளாளராக திரு. எம். செல்வராசா, மற்றும் எட்டு உறுப்பினர்களும் மேலதிகமாக ஐந்து உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# புதிய ஆலயங்களைத் தோற்றுவிக்காது புராதன ஆலயங்களை புனரமைக்க வேண்டும்

(ஊரைதீவு)

புதிய ஆலயங்களைத் தோற்றுவிக்காது புராதன ஆலயங்களைத் தேடிச்சென்று புனரமைக்கவேண்டும். பாடல் பெற்ற திருக்கேதீச்சரம் பாழடைந்து கிடந்த நிலையைக் கண்டு வருந்திய நாவலர் பெருமான் தனது சமயப்பிரசங்கங்களில் எல்லாம் திருக்கேதீச்சரத்தைப் புனரமைக்குமாறு மக்களைத் தூண்டினார். அவரது தூண்டுதலினால் ஈர்க்கப்பட்ட யாழ்ப்பாணத்துத் தனவந்தர்கள் திருக்கேதீச்சரப் பிரதேசத்தை வாங்கிச் சைவச் சொத்தாக்கினார்கள். என்றோ யாழ்ப்பாணத்துத் தனவந்தர்கள் இட்ட கால்கோள் சேர். கந்தையா வைத்தியநாதனின் காலத்தில் பழமாகிக் கனிந்தது. இந்த முன்னுதாரணத்தைச் சைவர்கள் பின்பற்றி பழைய ஆலயங்களைத் தேடிச் சென்று திருப்பணி புரிய வேண்டும்.

திருப்பணிகளை ஏனோதானோ என்று செய்யாமல் தீர்க்கதரிசனத்தோடு சிந்தித்து திட்டங்கள் போட்டு எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் செய்ய வேண்டும். இருநூறு ஆண்டுகள் சென்றாலும் இடிக்கத் தேவையில்லாத அளவுக்கு ஆகம விதிக்கேற்பவும் ஆசறுதியாகவும் கட்டிட வேலைகள் அமைய வேண்டும். விரைவாகச் செய்து விலாசம் தேட வேண்டும் என்று சிந்திக்காமல் முக்காலமும் முழுமையாகப் பரிணமிக்கக் கூடிய முறையில் ஆலயங்களை அமைக்க வேண்டும்.

புங்குடுதீவு நுழைவாயில் மடத்து வெளி ...ம்பதி அருள்மிகு வீரகத்திப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைப் புனரமைப்புக் கூட்டத்திற்கு தலைமைதாங்கிப் பேசுகையில், தமிழர் கலாசாரச் சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆலய அருகாமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இடம் பெற்ற நிர்வாகிகள் தெரிவின் போது காப்பாளர்களாக திரு. எஸ். கே. மகேந்திரன் சிவஸ்ரீ நா கணேசராசக் குருக்கள் ஆகியோரும் தலைவராக க. அம்பலவாணரும் உபதலைவர்களாக சி. க உலகநாதன், வே. சுப்பிரமணியம் ஆகியோரும் செயலாளராக ப. கனகலிங்கமும் உபசெயலாளராக நா. இராசகுமாரும் பொருளாளராக இ. இராசமாணிக்கமும், உப பொருளாளராக ச. நாகேஸ்வரியும் எண் பார்வையாளராக க. கா. கந்தசாமியும் தெரிவு செய்யப் பட்டனர்.

## சிரமதான அடிப்படையில் சீரமைப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மக்களின் நீண்ட நாள் குறைபாடாக இருந்து வந்த வெள்ள வாய்க்கால் புனரமைப்பு இளைஞர்கள் முயற்சியால் கை கூடியுள்ளது.

கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட இச் சிரமதானப் பணியில் இளைஞர்களுடன் முதியோர், பெண்களும் கூட ஈடுபட்டுள்ளனர்.

## சிரமம் அகன்றது

(புங்குடுதீவு)

நீண்டகாலமாகத் திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காட்சியளித்த வேலணை- புங்குடுதீவு பிரதான வீதி கடந்த வார இறுதியில் சீரமைக்கப் பட்டுள்ளது.

வேலணை பெருந்தெருக்கள் திணைக்களத்தினர் இத்திருத்த வேலைகளைச் செய்துள்ளனர். இதனால் வாகனப்போக்குவரத்துக்கள் சிரமமின்றி நடைபெற வாய்ப்பேற்பட்டுள்ளது.

# இன்றைய காலகட்டத்தில் கி. அ. சங்கபணி தலையாயது

(யாழ்ப்பாணம்)

"பல்வேறு வகையான குறைபாடுகளுடன் மிகவும் நெருக்கடியான சூழ் நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் ஒவ்வோர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பங்களிப்புகளும் மிக முக்கியமாகும்

இவ்வாறு கோப்பாய்தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில், சங்கத் தலைவரும், இளைப்பாறிய அதிபருமாகிய திரு. எஸ். சபாரத்தினம் குறிப்பிட்டார்.

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. ஜீ. செல்லத்துரை பேசும் போது, கோப்பாயில் கிராம மட்டத்தில் தொண்டர்படை அமைப்பதன் மூலம், மக்களின் அவசர சிலதேவைகளை அவ்வப்போது நிவர்த்தி செய்ய முடியுமென்றும் கூறினர்.

சங்கச் செயலாளரான, "சமூக இரத்தினம்" திரு எம். கே. இளையப்பு, ஜே. பி. தமது உரையில், "சங்கத்திற்கென நிரந்தர கட்டடம் ஒன்று அமைப்பதற்காக நீண்ட கால முயற்சியெடுத்தும் இதுவரை நிறைவு பெறவில்லையென்றும், எனவே 1986ம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் கட்டடம் அமைப்பதற்கான நிதி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும்" குறிப்பிட்டார்.

1986ம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் மேற்படி சங்கக் கட்டடம் அமைப்பதற்குரிய நிதியை, ஒதுக்கித்தருப்படியாகவும், பல்வேறிடங்களிலிருந்தும் குடிபெயர்ந்து அகதிகளாக்கப்பட்டு வந்து கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதி முகாம்களிலும் உற்றார் உறவினர் இல்லங்களிலும் தங்கி வசித்து வரும் அகதிகளுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்கி உதவ வேண்டுமென்பது உட்பட வேறு சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## சிறுவர் பெறும் பயன்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் உள்ள நுணுக்கல் கிராமத்தில் வதியும் சிறுவர்களின் கல்வி வளர்ச்சி கருதிப் பாலர் பாடசாலை ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

தொண்டர் ஸ்தாபனம் ஒன்று இப் பாலர் பாடசாலையை நடத்துகிறது. இலவசமாக இங்கு பாலர்களுக்குக் கல்வி போதிக்கப் படுகிறது. இதனால் பெருந் தொகையான சிறுவர்கள் பயன் பெறுகின்றனர்.

உதய சிந்தனை

தொழிலாளியின் வியர்வை உலருமுன் அவனுடைய ஊதியத்தைக் கொடுத்துவிடு

—முஹம்மது நபி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 2336

## இதய ஒலி

06-12-85 வெள்ளிக்கிழமை (குரோதன கார்த்திகை-21)

# டாக்காவில் நடக்கும் இறுதிப் பேச்சு?

தமிழர் பிரச்சினை தொடர்பாக அடுத்து என்ன நடவடிக்கை எடுக்கப்படப்போகின்றது?

இது பற்றி பல்வேறு மட்டங்களில் பலதரப்பட்ட அபிப்பிராயங்கள், கருத்துக்கள், தகவல்கள் தற்போது பரிமாறப்பட்டு வருகின்றன

ஆயுதப்படையினர் மீண்டும் சுற்றி வளைக்கும் ரோந்து நடவடிக்கைகளை எந்த நேரத்திலும் ஆரம்பிக்கலாமென்று நம்பிக்கையான சில வட்டாரங்கள் அச்சம் தெரிவித்து வருகின்றன.

இதற்குக் கட்டியம் கூறுவது போல ஆனையிறவு, மாங்குளம், முல்லைத்தீவு, நாவற்குழிப் பகுதிகளிலிருப்பவர்கள் ஏற்கனவேயே தமது நடமாட்டங்களை ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஆனால், தமிழ்ப் போராளிகளே மிகப் பெரிய தாக்குதலொன்றுக்குத் தம்மைத் தயார்படுத்தி வருவதாக பாதுகாப்புப் படைகளின் கூட்டுக்குழுத் தலைவரான பிரிகேடியர் சிறில் ரணதுங்கா அறிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவத்தின் போது படையினர் மேற்கொள்ளும் பதில் தாக்குதலினால் அப்பாவிகளான தமிழர்கள் பலர் பலியாக நேரிடலாமென்று அவர் வருத்தமும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் மிக நீண்டகால அரசியல் பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக எடுக்கப்படவிருக்கும் தீர்வாக இதனைக் கொள்ளலாம்.

"இப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக தீர்வு காண முடியும். ஆனால் அதனை நாங்கள் விரும்பவில்லை" என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன அவர்கள் சில வாரங்களுக்கு முன்னர் பத்திரிகைப் பேட்டியொன்றில் தெரிவித்ததும் இங்கு நினைவு கொள்ளப்பட வேண்டியது.

ஆட்சியாளர்கள் என்னதான் சொல்லிவந்தாலும், இராணுவத் தீர்வொன்றை நாடியே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதை அனைவருமே அறிவர்,

இதற்கிடையில் புதுடில்லியில் கூட்டணியினர் தெரிவித்துள்ள மாற்று யோசனைத்திட்டங்களும், கொழும்பில் அமைச்சர் தொண்டமானும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் நடத்திய மந்திராலோசனையும் அரசியல் வட்டாரங்களில் சிறு கலகலப்பை ஏற்படுத்தியுள்ளன.

தமது மாற்று யோசனைத்திட்டம் பற்றி எதனையுமே வெளியிட கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் மறுத்திருக்கிறார்.

திரு. அமிர்தலிங்கம் தெரிவித்த யோசனைகள் பற்றி பரிசிலனை செய்யப்படுமென்று திரு. ரமேஷ் பண்டாரி தெரிவித்திருக்கிறார்.

டாக்காவில் இன்று இலங்கை ஜனாதிபதியுடன் இது பற்றித் தாம் பேசவிருப்பதாகவும், இலங்கையில் இடம் பெறும் கொலைகளையிட்டு பாரதம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாகவும் பிரதமர் ராஜீவ் கூறியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியும், இந்தியப் பிரதமரும் இனப்பிரச்சினை பற்றி இன்றும் நாளையும் டாக்காவில் பேசுவார்கள் என்று இலங்கை அரசும் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பாக இருநாட்டுத் தலைவர்களும் நடத்தும் கடைசி நேரடிப் பேச்சுவார்த்தை இதுவாகத்தான் இருக்கும் என்று கொழும்பு - புதுடில்லி உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதையும் இச்சந்தர்ப்பத்தில் கவனிக்க வேண்டும்.

இது உண்மையானதென்பதை நிரூபிக்கும் வகையில் ஜனாதிபதி ஜெயவர்த்தன, அமைச்சர் தொண்டமானிடம் தெரிவித்துள்ள கருத்து அமைந்துள்ளது.

தமிழர்களுடன் சம்பந்தப்பட்ட சகல பிரச்சினைகளுக்கும் இறுதித்தீர்வு டாக்கா மாநாடு முடிந்து தாம் நாடு திரும்பியதும் எடுக்கப்படுமென்று அவர் சொல்லியுள்ளதையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

எல்லா வகையாலும் பார்க்கும் போது, அடுத்த வாரம் பல முக்கியமான முடிவுகளையும், நடவடிக்கைகளையும் எடுக்கும் வாரமாக அமையலாம்.

கடந்த வருடம் போன்று தான் இவ்வருட இறுதியும் அமையுமா, அல்லது தமிழ் மக்கள் 1986 ஐ மகிழ்வுடன் எதிர்கொள்ள வாய்ப்பு ஏற்படுமா என்பதை பங்களாதேஷின் தலைநகரான டாக்கா இன்று நிர்ணயிக்கலாம்!

# அற்புதங்கள் பல புரிந்த கிறிஸ்மஸ் தாத்தா புனித நீக்கிலார்

## இன்று பெருநாள் தினம்

> இன்று டிசம்பர் மாதம் 6 ம் திகதி, உலகமெங்கணுமுள்ள கத்தோலிக்கர்கள் புனித நீக்கிலாரின் பெருநாளை கொண்டாடுகிறார்கள். எங்கள் பகுதியில் மிருசுவில், நாவாந்துறை, மன்னார், தோட்டமாகாடு ஆகிய இடங்களிலுள்ள புனித நீக்கிலார் ஆலயங்களில் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. இதனையொட்டி இப்புனிதரின் வரலாறு இங்கு பிரசுரமாகின்றது.

ஆசியாக்கண்டத்தில் லீசியா என்னும் நாட்டில் எப்பிபாலியுஸ், யுவான்னு என்னும் செல்வந்த தம்பதிகளின் ஏக புதல்வனாக புனித நீக்கிலார் இவ்வுலகில் அவதரித்தார்.

அவர் குழந்தையாயிருந்த போதே ஒரு சந்தி பிடித்து ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபட்டு வந்தார் பின்னர் பெற்றோர் இறந்ததின் பின் அவருக்கு கிடைத்த திரளான செல்வத்தை நற்கருமங்களிற் செலவிட்டார். அவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட பின் முன்னரைவிட தருமவழிகளில் அதிகம் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். இவர் இவ் உலகத்தில் வாழ்ந்த சமயத்தில் யேசுவின் திருப்பாடுகளின் பேரில் கொண்டிருந்த பக்தி காரணமாக அதிகபுதுமைகளைச் செய்தார்.

கடல் பயணங்களின் போது புயல் வீசுவதற்கான எவ்வித முன் அறிகுறிகளும் இல்லாத போதே புயல் வீசப்போகின்றது என்று எச்சரிக்கை செய்து கடல் பயணிகள் பலரைக் காப்பாற்றியிருக்கின்றார்

**பி.கிறிஸ்ரிறஞ்சன்**

மீரா என்ற பட்டினத்தின் அதிமேற்றிராணியாராகஇறை ஏவலால் தெரிவு செய்யப்பட்ட புனித நீக்கிலார் தமது மறை மக்களின் ஆன்ம சரீர நலன்களை அன்பார்ந்த தந்தைக்குரிய அக்கறையுடன் நிறைவேற்றினார். திருச்சபைக்கெதிராக உண்டான வேதகலாபனையின் போது எதிரிகள்அவரைசிறைப் பிடித்து வேறு ஒரு நாட்டிற்கு நாடு கடத்தி சித்திரவதை செய்தார்கள். எனினும் அவற்றை எல்லாம் இறைவனுக்காக மிகுந்த பொறுமையுடன் தாங்கிக்கொண்ட இவர் பின்னர் மீண்டும் மீரா நகர் மீளப்பெற்றார்.

மூன்று குழந்தைகளின் உடல்கள் கண்டதுண்டமாக வெட்டப்பட்டு பதப்படுத்தப்பட்டு வியாபாரப் பொருளாக வைக்கப்பட்டிருந்ததை அறிந்த புனித நீக்கிலார் இறை அருளால் அவர்களை மீண்டும் உயிர்ப்பித்தார்.

இந்த அற்புதம் நடைபெற்ற நாளிலிருந்து உலகெங்கணுமுள்ள சிறுவர் சிறுமியர் கிறிஸ்மஸ் திருநாளில் தங்களுக்கு அழகான பொருட்களைப் பரிசாகத் தரும் 'சாந்தகளாவுஸ்' (கிறிஸ்மஸ்தாத்தா)எனநாமம் சூட்டி புனித சன். நீக்கிலாரை கொண்டாடுகின்றார்கள்.

இது தவிர அரச மனையைச் சேர்ந்த மூன்று பேர் அநீதியான முறையில் கொல்லப்பட இருக்கின்றார்கள் என்பதை அறிந்த புனிதநீக்கிலார் அவர்கள் மேல் சுமத்தப்பட்டிருந்த குற்றத்தை அவர்கள் செய்யவில்லை என வாதிட்டு அவர்களை விடுவிக்கச் செய்தார். எனினும் மீண்டும் அம்மூவரின் மேலும் குற்றம் சாட்டப்பட்டதினால் அரசன் அவர்களின் தலையை வெட்ட உத்தரவிட்டான். அவர்கள் தங்களைக் காப்பாற்றும்படி பல மைல் தூரத்திலிருந்த புனித நீக்கிலாரை மனதால் வேண்டிக் கொண்டார்கள். அன்றுஇரவே புனித நீக்கிலார் அரசனுக்கு தரிசனையாகி அவர்களை விடுதலை செய்யாவிட்டால் பல தொல்லைகளுக்கு உள்ளாக வேண்டி வருமென எச்சரித்தார். இதனால் அரசன் பயந்து அம்மூவரையும் விடுதலை செய்தான்.

புனித நீக்கிலார் உயிரோடு இருந்தபோது மட்டுமின்றி அவர் இறந்தபின்பும் பல அற்புதங்களைச் செய்துள்ளார். அடிமையாக சிறைப்பட்டு துலுக்கர் கையில் சிக்குண்ட சிறுவன் ஒருவன் எகிப்து தேசத்து அரசனிடம் ஊழியம் செய்தான் அச்சிறுவன் புனித நீக்கிலாரின் பெயரில் சொல்லிய தோத்திரம் அரசன் காதில் விழுந்தது. உடனே அரசன் சிறுவனைப் பார்த்து நீ சொன்னபடியே நீக்கிலார் செய்யக்கூடியவர் என்றால் உடனே உன்னை மீட்க ஏன் புதுமை செய்யவில்லை எனக் கேட்டுக் கேலி பண்ணினான். அப்போது புனித நீக்கிலார் அரசன் முன் தோன்றி சிறுவனை மீட்டு அவனின் சொந்த ஊரில் சேர்ப்பித்தார்.

இதனால் ஆத்திரமுற்ற அரசன் அவரின் பெயரிலுள்ள தேவாலயங்களை அழிக்கப் பல தந்திரங்களைச் செய்தான். ஒருமுறை அவரின் பக்தனாக நடித்த அரசன் பெரிய மெழுகுதிரி ஒன்றின் நடுப்பகுதியில் வெடிமருந்தை வைத்து அதனை கோவிலுக்கு காணிக்கை கொடுத்தான். ஆலயத்தில் மெழுகுதிரி எரிந்து கொண்டிருக்கும் போது வெடிமருந்து வைக்கப்பட்டிருந்த பகுதி வந்ததும் அது தானாகவே அணைந்து விட்டது. அங்குள்ளவர்கள் அதனை மீண்டும் எரியப்பண்ண எவ்வளவோ முயற்சித்தும் அது எரியவில்லை இதனால் மெழுகுதிரியை அங்குள்ளவர்கள் உடைத்து பார்த்த போது அதனுள் வெடிமருந்து இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். புனிதர் தனது ஆலயத்தை அற்புதமாக காப்பாற்றியதைக்கண்டு கொண்டனர்.

புனித நீக்கிலார் கிறிஸ்துவுக்குப்பின் 327 ல் மரணித்த பிற்பாடு அவருடைய உடலில் இருந்து மதுரமுள்ள இரசம் புதுமையாகக் கசிவதைக் கண்டார்கள். இவ்விரசத்தைப் பருகிய பல வியாதிக்காரர்கள் அற்புதமாகக் குணமடைந்தார்கள்.

நெயாப்பொலி இராச்சியத்திலுள்ள பாரி என்னும் நகரத்தில் உள்ள ஆலயத்தில் புனித நீக்கிலாரின் திருச்சரீரம் கொண்டு செல்லப்பட்டது. அங்குள்ள அவரின் திருச்சரீரத்திலிருந்து புறப்படும் இரசத்தினால் குணமடையவென பல யாத்திரிகர்கள் குறிப்பாக டிசம்பர் மாதம் 6ம் திகதி அங்கு கூடுகின்றார்கள்.

# ஐந்து அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி நடவடிக்கை

ஐந்து அம்சக்கோரிக்கையை வலியுறுத்தி மகாநாடுகள் ஊர்வலங்களை நடத்தவும் தொழிற்சங்க ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பதின்மூன்று தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பான வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு முனைந்து செயற்பட்டு வருகிறது,

இதற்கான போராட்டங்களை முன்னெடுப்பதற்காக சுமார் முப்பது ஆயிரம் ரூபாவை 'போராட்ட நிதி'யாக குறுகிய காலத்திற்குள் திரட்டுவதற்கும் கூட்டுக்குழு திட்டமிட்டுள்ளது.

## அகதிகளுக்கு அன்பளிப்பு

உலக இந்து மகாசபை, இலங்கை (விஸ்வ ஹிந்து பரிஷட், இலங்கை) யும், யாழ். மாவட்ட மங்கையர் கழகமும் ஒன்றிணைந்து வேலணை, கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு ரூபா 112, 000/- பெறுமதியுள்ள துணிவகைகளும், பால்மாவும் அன்பளிப்பாக வழங்கின

வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில்கடந்த சனிக்கிழமையும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமையும்மேற்படி அன்பளிப்புகள் செய்யப்பட்டன இவ்விரு தினங்களிலும் நல்லை ஆதீன முதல்வர் சமுகமளித்து, அகதிகளுக்கு ஆசியுரை கூறி அன்பளிப்பு வைபவத்தை தொடக்கி வைத்தார்.

## கிறிஸ்மஸ் விழா

இளவாலை றோ. க. ஆண்கள் பாடசாலையில் சனிக்கிழமை ஏழாம் திகதி கிறிஸ்மஸ் விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக அருட்திரு சி.ஜி, ஜெயக்குமார் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக அருட்திரு.மைக்கல் ரி பற்றிக் அடிகளாரும் கலந்து கொள்ளுகின்றார்கள்.

## கண்காணிப்புக்குழு

யாழ்ப்பாண மாவட்டத்தில் க.பொ.த. (சாதாரணம்)பரீட்சைகளை கண்காணிப்பதற்கென ஒவ்வொரு தொகுதியிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் ஆரம்பமாகும் பரீட்சையை ஒழுங்காக நடத்தவென ஒவ்வொருதொகுதியிலும் இருந்து, பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரின் உதவியுடன் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ வீதிப்போக்குவரத்து தடை ★ தீவைப்பு, கட்டடத் தகர்ப்பு முயற்சிகள் ★ கல்வீச்சு

# சென்னை மீனவர் கிளர்ச்சி விஸ்வரூபம்; பொலிஸ் சுட்டு அறுவர் பலியாகினர்!

(சென்னை)

சென்னை மெரீனு கடற்கரையை எழிலூட்டும் தமிழக அரசின் நடவடிக்கையையடுத்து ஏற்பட்ட மீனவர் கிளர்ச்சி விஸ்வரூபம் எடுத்ததால் விபரீதங்கள் பல விளைந்துள்ளன என்று அறிவிக்கப்படுகின்றது. பொலிஸாருக்கும், மீனவருக்கும் இடையே நேற்று முன்தினம் உண்டான மோதலில் அறுவர் கொல்லப்பட்டுள்ளனர். எண்பத்தொன்பது பொலிஸார் காயமடைந்துள்ளனர் என நேற்றுக் காலை தெரிவிக்கப்பட்டது.

மேற்படி வீதிகளில் தடைகளைப் போட்டு மீனவர்கள் போக்கு வரத்தைத் தடை செய்ய முற்பட்டதுடன் இருபது பொலிஸ் வாகனங்களுக்கும், முப்பது தனியார் வாகனங்களுக்கும் சேதம் விளைவித்துள்ளனர்.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் ஆறு பஸ்களும் இதில் சேதமடைந்தன.

கட்டுமீறிய கூட்டத்தைக் கலைக்கப் பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும், குண்டாந் தடிப் பிரயோகமும் செய்ய நேரிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவை பயனற்றுப் போகவே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் பொலிஸாருக்கு உண்டானதாம். அதில் அறுவர் கொல்லப்பட்டனர்; சிலர் சூட்டுக் காயங்களுடன் சென்னை அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் நொச்சிக்குப்பம் பொலிஸ் நிலையத்தையும் தாக்கித் தீவைக்க முயன்றனராம், பொலிஸார் மீது கற்களையும் வீசினராம்.

குடிசை வாரியக் கட்டடத்தையும் தாக்க ஐயாயிரம் பேர் கொண்ட கூட்டம் முனைந்த போதும் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இச் சம்பவங்கள் குறித்து உள்துறைச் செயலர் திரு. வி. வெங்கட்ராமன் தகவல் தருகையில், இடவசதி வாடகையை ரத்துச் செய்யக் கோரி மீனவர் வன்முறையில் ஈடுபட்டதாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததால் அவர்கள் கட்டு மீறிய தாகவும் கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி பொலிஸ் துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்துள்ளார்.

செய்தியாளரிடம் பேசிய அவர், 'நீண்டகாலமாக உள்ள மீனவர் பிரச்சினையை அரசு விரைவில் தீர்த்து வைக்க வேண்டும்'' என வற்புறுத்தியுள்ளார்.

இத் துப்பாக்கிச் சூடுகுறித்து நீதி விசாரணை நடத்தவேண்டும் என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகச் செயலாளர் திரு. நல்லசிவம் கோரியுள்ளதுடன் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார்.

ராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் திரு. அருளானந்தம் மீனவர்க்கெதிரான நடவடிக்கைகளை அரசு கைவிட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## ரூ. 6 1/2 லட்சம் கடத்தல் பொருள் கண்டுபிடிப்பு

(மதுரை)

மதுரையில் சுங்க இலாகாவினர் ஆறரை லட்சம் ரூபா பெறுமதியான கள்ளக்கடத்தல் பொருட்களை இரு லொறிகளில் இருந்து கைப்பற்றியுள்ளனர்.

இவற்றில் வீடியோ கசற்றுகள், ஜவுளிகள் இருந்தன.

ரஷ்ய செய்திஸ்தாபனம் 'டாஸ்'

## பாகிஸ்தானுக்கான கூடுதல் அமெரிக்க உதவிக்கு சாடல்

(மாஸ்கோ)

பாகிஸ்தானுடனான ஒத்துழைப்பு, நட்புறவு முயற்சிகளில் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மேற்கொண்டுள்ள முயற்சிகளை சோவியத் யூனியன் வெகுவாகப் பாராட்டியுள்ளது

சோவியத்தின் உத்தியோக பூர்வ செய்தித்தாபனமான 'டாஸ்' பாகிஸ்தானுக்கான உதவிகளை அதிகரித்து வருவது குறித்து தனது விமர்சனத்தில் அமெரிக்காவை வன்மையாகச் சாடியுள்ளது.

கல்கத்தாவில் பகத் அறிவிப்பு

## அத்துமீறல், வன்முறை நீங்கின் சமரஸப் பேச்சு சாத்தியம்

(கல்கத்தா)

''இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசுக்கும், தமிழர் அமைப்புகளுக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தும் நிலையை உருவாக்கவே பாரத அரசு முயற்சி செய்து வருகிறது'' என்று பாரத வெளி விவகார அமைச்சர் திரு. பி. ஆர். பகத் டாக்கா செல்லும் வழியில் கல்கத்தா விமான நிலையத்தில் சற்று நேரம் தரித்து நிற்கையில் செய்தியாளரிடம் சொன்னார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி சமர்ப்பித்துள்ள புதிய மாற்று யோசனைகள் பற்றிப் பிரஸ்தாபித்த அவர், போர் நிறுத்த ஒப்பந்த மீறல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலும் இதில் உண்டு' என்றார்.

''அத்து மீறல்களும், வன்முறைகளும் நீங்கினாலே சமாதானப் பேச்சுக்கள் நடத்தப் போதுமானது. நம் அரசின் விருப்பமும் இதுவே'' என்றும் அவர் சொன்னார்.

## 17ம் திகதி ஷியா பாரதம் வருகிறார்

(புதுடில்லி)

பாகிஸ்தான் ஜனாதிபதிஷியாவுல் ஹக் இம்மாதம் பதினேழாம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்வார் எனப் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி நேற்று லோக்சபாவில் தெரிவித்தார்.

ஜனாதிபதிஷியா தமது மாலைதீவு விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் வழியில், புதுடில்லி வருவார் எனச் சொன்ன பிரதமர் அன்றைய தினமே அவர் பாகிஸ்தான் மீள்வார் எனவும் கூறினார்.

பாகிஸ்தான் ஜனாதிபதியை ஓமான் குடியரசுத் தினத்தில் சந்தித்த பிரதமர் காந்தி இந்தியாவுக்கு வரும்படி அழைப்பு விடுத்தது தெரிந்ததே.

பாரதப்பிரதமர் விளக்கம்

## இந்திய வம்சாவளியினர்: இயற்கை அக்கறை எழுகிறது

(புதுடில்லி)

''இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினர் விடயத்தில் இந்தியா இயற்கையான அக்கறை கொண்டுள்ளது'' என்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தி புதுடில்லியில் எதிர்க் கட்சித்தலைவர்களைச் சந்திக்கையில் குறிப்பிட்டார்.

''இலங்கையில் தமிழர்கள் கொலை செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்பதில் பாரதம் ஆர்வம் கொண்டுள்



ளது'' என்றும் அவர் சொன்னார்.

○ 'சாகும் வரை பதவி விலகார்' ○

### எம். ஜி. ஆர் பற்றி நாஞ்சிலார்

(சென்னை)

''முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தான் சாகும் வரை முதலமைச்சர் பதவியை விட்டு விலகவேமாட்டார். பதினைந்து வருடகாலம் அவருடன் நெருங்கிப் பழகிய என்னால் இதை உறுதியாகக் கூற முடியும்'' என்று தமிழக மாஜி மந்திரியும் தற்போதைய தி.மு.க. முக்கியஸ்தர்களில் ஒருவருமான திரு. நாஞ்சில் மனோகரன் 'குமுதம்' இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளார். திரு. எம். ஜி. ஆர். பேச முடியாதவராயிருக்கிறார், செயலற்றுப் போயிருக்கிறார். எனக்கூறி பிரதமர் அவரை முதலமைச்சர் பதவி விலகச் செய்வதும் சாத்தியமில்லை என்றும் கூறியுள்ள அவர் கலைஞர் கருணாநிதி சிறந்த நிர்வாகி, ராஜதந்திரி மக்கள் ஆதரவுடன் அவர் மீண்டும் ஆட்சிப்பொறுப்பு ஏற்பார்'' என்றும் தெரிவித்துள்ளார்.

## கம்பாலாவில் கடும் மோதல்

(கம்பாலா)

உகண்டாவில் கம்பாலா அருகே அரசு படைகளுக்கும் கெரில்லாக்களுக்கும் இடையே கடும் மோதல் நிகழ்ந்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஜெயில்சிங், ராஜீவ், குரானா, எம்.ஜி.ஆர், கோரிக்கை

## முப்படைகள் நலவாழ்வுக்காக மக்கள் தாராளமாக உதவ வேண்டியது அவசியம்

(சென்னை)

முப்படைகளினதும் நலவாழ்வுக்குத் தாராளமாக உதவ வேண்டும் என்று ஜனாதிபதி திரு. ஜெயில்சிங், பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, தமிழக ஆளுநர் திரு. எஸ். எல். குரானா, தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி முப்படைகள் தினத்தையொட்டி வெளியிட்ட செய்தியில் ''முப்படைகளின் தொண்டும், கண்ணியமும் பாராட்டுக்குரியன. நாடு அவற்றிற்கு நன்றிக்கடன்பட்டுள்ளது'' என்றுகூறியுள்ளார்.

தமிழக ஆளுநர் தனது செய்தியில், ''நாட்டின் சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள வெளியார் அச்சுறுத்தலுக்கு எதிராக முப்படைகளும் பாடுபட்டுவருகின்றன. அவற்றிற்குச் சகல ஆதரவும் வழங்க வேண்டியது எமது தலையாய கடமை'' என்று தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தனது செய்தியில், ''நாட்டுக்காகப்படையினர் தம் இன்னுயிரை ஈர்ந்துள்ளனர். அவர்களுக்காகநாம் தாராளமாக உதவவேண்டும்'' எனக்கேட்டுக் கொண்டுள்ளார்.

கோவை, திருச்சியில்

## கிளர்ச்சி நடத்திய ஏராளம் ஆசிரியர்கள் கைதாகினர்!

(சென்னை)

தடையுத்தரவையும் மீறி, தமது பத்து அம்சக் கோரிக்கைகளை வற்புறுத்தி போராட்டம் நடத்திய இரண்டாயிரத்து நானூறுக்கும் கூடுதலான ஆசிரியர்கள் கோயம்புத்தூரிலும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் திருச்சியிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊதிய உயர்வு உட்பட பல கோரிக்கைகளை வற்புறுத்தி ஆசிரியர்கள் கிளர்ச்சி நடத்தி வருகின்றனர்.

பிராந்திய ஒத்துழைப்பு பற்றி

## பாரத-இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் விவாதிப்பு

(டாக்கா)

பாரத வெளிவிவகார அமைச்சர் திரு. பி. ஆர். பகத் டாக்காவில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீதைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இவ்விருவரும் பிராந்திய ஒத்துழைப்பு குறித்து சம்பாஷித்ததாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறு இருக்க, தெற்காசியப் பிராந்திய நாடுகளின் வெளிவிவகாரச் செயலர்கள் தயாரித்த பிரகடன வாசகத்தையொட்டி மேற்படி நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் விவாதம் நடத்தியுள்ளனர் என்றும் டாக்கா தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் சனிக்கிழமை மேற்படி நாடுகளின் தலைவர்கள் இவ்வாசகத்தை முறைப்படி ஆமோதிப்பர்.

## தீவிரவாதிகள் மதம் என்ன? ராஜீவ் விளக்கம்

(புதுடில்லி)

''தீவிரவாதிகளுக்கு மதம் என்று ஒன்றில்லை; வன்முறையே அவர்களின் மதமாகும். எனவே அவ்வழிகொண்டே அவர்களை அடக்க முடியும்'' என்று பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி பொது நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறியுள்ளார்.

ஈழமுரசு

## யாழ் புகையிரத நிலையத்தில் தரகர்கள் டிக்கட் விற்பனை

யாழ். ரயில் நிலையத்தில் பிரயாணச் சீட்டுக்களின் விற்பனை உத்தியோக பூர்வமாக நிறுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சில தனி நபர்கள் மேற்படி ரயில்கள் வரும் நேரங்களில் டிக்கட் விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளார்கள். இந்த 'டிக்கட் தரகர்கள்' யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் முன்னதாகவே டிக்கட்டைப் பெற்றுக்கொண்டு வந்து ரயில் நிலையத்தில் அவற்றை பத்து பதினைந்து ரூபா கூடுதலாக விற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் 'அவசரமாகப்' பயணம் செய்பவர்கள் வேறு வழியின்றி இவ்வாறு டிக்கட்டைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு:

# பாதிப்புற்ற பகுதி மாணவர்கள் யாழ்நகரில் ஜி. சி. ஈ. பரீட்சைக்குத் தோற்ற விசேஷ நிலையம்

(வண்ணார்பண்ணை)

"திருகோணமலை உட்பட வேறு இடங்களில் இருந்தும் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து வந்துள்ள மாணவர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்காக சில பரீட்சை நிலையங்கள் விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது ஏனைய மாணவர்களுக்குப் பரீட்சை முடிவுகள் வரும் திகதியில் இடம்பெயர்ந்து வந்துள்ள மாணவர்களுக்கும் பரீட்சை முடிவுகள் கிடைக்கக் கூடிய ஒழுங்குகளைச் செய்துள்ளேன்."

இவ்வாறு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு - பெற்றோர் தின விழாவுக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்டு யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு ம சிமியாம்பிள்ளை உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நல்லூர் வட்டாரத்தில் மிக முதன்மை வாய்ந்த ஆரம்பப் பாடசாலையாக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை திகழ்கின்றது. இங்கு கல்விகற்கும் மாணவர்களின் திறமையும் கூட இவ் ஆரம்ப பாடசாலையின் வளர்ச்சிக்குக் காரணம், அதிபரின் நிர்வாகத் திறமையினலும் இப்பாடசாலை உயர்ந்து நிற்கின்றது. இப் பாடசாலையில் இரண்டாம் மாடிக்கட்டடத்தை இன்னும் ஒரு மாதத்தில் செய்து முடிப்பேன் என்ருர்.

இவ்விழா யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி பேசுகையில் இப் பாடசாலை பல ஆரம்பப் பாடசாலைக்கும் மகுடமாக இப் பாடசாலை விளங்கிவருகின்றது என்ருர்.

இறுதியில் பாடசாலை மாணவர்களுக்கு பரிசளிப்பு வைபவமும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும நடைபெற்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கச்செயலாளர் திரு கே. கோடீஸ்வரன் நன்றியுரை வழங்கினுர்.

### உரியவர் பெறுக

(யாழ்ப்பாணம்)

சே. சிவனேஸ்வரி, கொழும்புத்துறை கிராமசேவையாளர் மேற்பார்த்து, யாழ்ப்பாணம் என்று விலாசமிடப்பட்ட க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை அனுமதிப் பத்திரம் தன்னிடம் உள்ளதாகவும் உரியவர் பெற்றுக் கொள்ளும்படியும் கொழும்புத்துறை கிராம சேவையாளர் திரு எஸ். எம். டொமினிக் தெரிவிக்கிருர்.

### பெண்ணிடம் பணம் கொள்ளை

கொக்குவில் மேற்கிலுள்ள க. சற்குருநாதன் என்பவரது வீட்டில் திங்கள் காலை பத்து மணியளவில் கைத்துப்பாக்கியுடன் சென்ற இரு இளைஞர்கள் அங்கு தனிமையிலிருந்த பெண்ணை பயமுறுத்தி 28,000 ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

### விடுதலை

(வவுனியா)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட கொலையுண்ட வவுனியா அரிசி ஆலை முதலாளியின் மகன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

**பனையில்....**

னர் பஸ்கள் மூலமும், புகையிரத 'மோட்டார் ரொலி' மூலமாகவும் அன்று பளைக்கு சிவில் உடையில் வந்தவர்கள் பளை பஸ் நிலைய சுற்றுடலில் நடத்திய தேடுதல் வேட்டையின் போது ஒரு இளைஞர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதும மேலும் ஐவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்குள்ளானதும் தெரிந்ததே.

**நவசமசமாஜ...**

கட்சியின் உறுப்பினர் பலரும் நேற்று இப்பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டனர்.

கைதான கருணாரத்ன கொழும்பு மேலதிக நீதவான் முன்னுல் ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 11ம் திகதி வரை ரிமான்டில் வைக்கப்பட்டுள்ளார்.

**இலங்கையில்....**

குடிமக்களும் மரணமடைந்துள்ளனமரனவும் தெரிவித்தார்.

1977,81,83 ம் ஆண்டுகளில் ஏற்பட்டது போனற இனக் கலவரமொன்று மீண்டும ஏற்படாமதெனக் கூறமுடியாது. இதனைக் கருத்தில் கொண்டே அரசியல் தீர்வைக்காண பாரதம் முழுமுயற்சி எடுத்துவருவதாகவும அமைச்சர் மேலும் சொன்னுர்.

**இளைஞர்...**

எனபவர் தமது வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணபபடடார். இரவு வீட்டாருடன் தமது இல்லத்தில் உணவருந்தவிட்டு படுக்கச்சென்ற இவ் இளைஞன் தனது வீட்டிலிருந்து முபபது யார் தூரததில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

**வவுனியா....**

விலலை.

வவுனியா புகையிரத நிலையததுககணமையில் பகீரதன் என்ற இளைஞர் கைதானதாகவும், இவர் பிரதான இயக்கமொன்றின் முக்கியஸ்தர் எனவும் கொழும்புககுக் கிடைதத தகவல்கள் தெரிவிக்கின்றன.

**ரயில் பயணம்....**

நிலையங்களில் பிரயாணிகள் காசுக்கட்டளைகளைக்கொடுதது பிரயாணச் சீட்டுக்களைப பெற்றுக் கொளள முடியும்.

(3) யாழ். புகையிரத நிலையத்திலிருந்து பிரயாணம் மேற்கொள்ளும் பிரயாணிகள் அதற்குரிய பணத்தை துரையபபா விளையாட்ரங்கில் உள்ள புகையிரத காரியாலயத்தில் காலை 8-00 மணி முதல் பகல 12-00 மணிவரை செலுத்தி பயணச் சீட்டுகளைப் பெறறுக் கொள்ளலாம். பிரயாணிகளின் வசதி குறித்து காலை 8-25க்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் உத்தர தேவி புகையிரதத்திற்கான பயணச் சீட்டுக்களை முதல் நாளே துரையப்பா விளையாட்டரங்கில் பெற்றுக் கொள்ளலாம்.

(4) இன்ரசிற்றி புகையிரதத்திற்கான பயணச் சீட்டுகள் பணத்திற்குரியவை துரையப்பா விளையாட்டரங்கிலும் பிரயாண ஆணைச் சீட்டிற்கு புகையிரத நிலையத்திலும் வழங்கப்படும்.

### மரண அறிவித்தல்

நெடுந்தீவு மேற்கு

**குமாரசாமி வள்ளியம்மை காலமானுர்:**

இவர், வ. குமாரசாமியின் அன்பு மனைவியும், புண்ணியமூர்த்தி, தனலட்சுமி, விநாயகமூர்த்தி, (காலஞ்சென்றவர்) ஆகியோரின் அன்புத் தாயும், பு. இராசஇராசேஸ்வரி (ஆசிரியை, மகாவித்திபாலயம், கிளிநொச்சி), ஏ. நடராசா (எழுதுவினைஞர், கச்சேரி கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியும், மையூரன், கௌரி, புவிந்திரன், சுகர்தினி, சின்னக்கிளி ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் நெடுந்தீவு மேற்கில் நடைபெறும். தயவுசெய்து இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி உற்ருர், உறவினரைக் கேட்டுக்கொள்கின்ருேம்.

நெடுந்தீவு மேற்கு,
நெடுந்தீவு.

கணவர், மக்கள், மருமக்கள்.

தகவல்: கு. புண்ணியமூர்த்தி

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 6 - 12 - 1985 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23386

பிரஜைகள் குழு ஜனதிபதியிடம் கேள்வி:

## புல்லுமலை குருக்கள் எங்கே? அவருக்கு என்ன நடந்தது?

(புலோலி)

மட்டக்களப்புப் புல்லுமலைப் பிள்ளையார் ஆலய குருக்கள் எங்கே என்றும் குருக்களுக்கு என்ன நிகழ்ந்தது என்றும் தகவல்களைத் தெரிவிக்க ஆவன செய்யுமாறு பருத்தித்துறை பிரஜைகள் குழு ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவாத்தனவைக் கேட்டுள்ளது.

மட்டக்களப்பு புல்லுமலை பிள்ளையார் ஆலய குருக்கள் பருத்தித்துறையைச் சேர்ந்தவரெனறும் அவர் ஆலயததிலிருந்து காணமல் போயுள்ளதாகவும் அவர் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள உதவுமாறு காணமல் போன புல்லுமலை பிள்ளையார் ஆலய குருக்களின் உறவினரொருவர் பருத்தித்துறைப் பிரஜைகள் குழுவைக கேட்டிருந்தார.

இதனைத் தொடர்ந்தே பிரஜைகள் குழு குருக்கள் பற்றிய தகவல்களைப பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறு ஜனதிபதியைக் கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக பிரஜைகள் குழு, கண்காணிப்பு குழு, தேசிய பாதுகாப்பு அமைசசர், மட்டக்களப்பு இராணுவ இணைப்பதிகாரி, மட்டக்களபபு அரசாங்க அதிபர், யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருடனும் கடித மூலம் தொடர்பு கொண்டுள்ளது.

சென். பற்றிகஸில் யாழ். ஆயர் உரை:

## மாணவர்களின் வளர்ச்சக்கு ஒழுக்கம், கட்டுப்பாடு தேவை

(வண்ணார்பண்ணை)

மாணவர்களின் வளர்ச்சிக்கு ஒழுக்கம், கடடுப்பாடு மிக முக்கியமாகும். இதனுலேயே பல பெற்ருேர்கள் தமது பிள்ளைகளைக் கலூரிகளின் விடுதிகளில் சேர்தது அவர்களை வளர்ப்பதற்கு விரும்புகிருர்கள்.

இவ்வாறு. நேற்று யாழ். புனித. பத்திரிசியார் கல்லூரியில் "தோமஸ் கட்டடம" எனும்பெயருடைய விடுதிசசாலையை திறநது வைததுப் பேசுகையில் யாழ். ஆயர் அதி. வண. பி. தியோகுப்பிள்ளை தெரிவித்தார்.

ஒரு மாணவன் தன்னுடைய உடல் வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் உள வளர்ச்சிக்கும் விளையாட்டைப் பயன்படுத்த வேண்டும். சிறு வயதில நாம் எடுக்கும் விளையாட்டுப் பயிற்சிகள்தான் நாம் தள்ளாடும் வயதிலுமநிமிந்து நடப்பதற்கு உதவுகின்றது என்றும் ஆயர் தெரிவித்தார்.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கலூரி அதிபா திரு. ராஜன் கதிர்காமர் பரிசில்களை வழங்கி கௌரவித்தார்.

தியோகுப்பிள்ளை விளையாட்டு அரங்கையும் புதிய விளையாட்டு மைதானததையும் திறந்துவைத்து யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு சீ. வீ கே. சிவஞானம் பேசும் போது நான் ஒரு இந்து சமயத்தவனுக இருக்கின்ற போதிலும் கூட என்னை இக் கத்தோலிக்க கல்லூரியின் விளையாட்டு அரங்கையும், விளையாட்டு மைதானத்தையும் திறந்து வைக்குமாறு அழைத்ததற்கு நான் சகல கத்தோலிககர்களுக்கும் கடமைப் பட்டுள்ளேன். பேச்சுசுந்தரம், மதச்சுதந்திரம், மொழிச்சுதந்திரம் அறறுப்போகும இந்நிலையிலும் நாம் தொடர்ந்தும் சமய வேறுபாடின்றி சேவை செய்வோம் என்ருர்.

**டிக்கட் விறபனை...**

டார்ந்து மன்னுர், மட்டக்களப்புப் பகுதிகளிலும் காசுக் கட்டளைக்கே பிரயாணச் சீட்டுக்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்படடுள்ளது.

**ஈழத்தமிழ்...**

பாரதப் பிரதிநிதியான ராஜ்ய சபா உறுப்பினர் திரு. ராமகிருஷ்ணன் எடுத்துக் கூறியுள்ளார் என்று நேறறு அறிவிக்கப்பட்டது.

இலங்கை இனப்பிரச்சினையில் ஏற்புடைய தீர்வு ஒன்று ஏற்பட தேவையான அரசு உதவிகளைப் பாரதம் செய்து வருகிறது என்று அவர் குறிப்பிடடார்.

தமிழ் அகதிகள் தங்கள் தாயகம் திரும்ப வகை செய்யும் அரசியல் தீர்வு ஒன்று விரைவில் எட்டப்படுமென அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

### தேன் பொழுது வெளியீட்டு விழா

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் வைததியசாலை உதவி வைத்தியமாணவர்களின் பயிற்சி நெறிப் பொறுப்பதிகாரி, டாக்டர் கனகசுகுமார், பொ. பூலோகசிங்கம் ஆகியோரின் "தேன்பொழுது" (பல்துறை சார்ந்த பத்தொன்பது கலைஞர்களின் செவ்வித்தொகுப்பு) நூல் வெளியீட்டுவிழா 7ம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய பர்வதவர்த்தனி கலா மண்டபத்தில் வைத்தியகலாநிதி எம். கே. முருகானந்தன் தலைமையில் நடைபெறுகின்றது.